# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19-A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in


## <u>செய்தி வெளியீடு</u>

**எண். 1 /2010**
**நாள் 6-01-2010**

தமிழ்நாடு மின்சார வாரியம், 6.00 மணியிலிருந்து 10.00 மணிக்கிடையிலுள்ள மின் தடைகளை தளர்த்துவதற்காக விருப்பம் தெரிவித்துள்ள உயர் அழுத்த நுகர்வோருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.7/-க்கு மேற்படாமல் நம்பகக்கட்டணம் விதிக்கும் உத்தேசத்திட்டத்திற்கும் மற்றும் ஜனவரி 2010 முதல் மே 2010 வரையிலான காலஅளவின்போது ஒரு நாளிலுள்ள மின்தடையில் 20 விழுக்காடு தளர்த்துவதற்கும், 2009 டிசம்பர் 14 அன்று பல்வகை மனு எண்.21 / 2009 கொண்ட மனுவையும் மற்றும் 2009 டிசம்பர் 16 அன்று வழக்கிடை விண்ணப்பத்தையும் 2009 டிசம்பர் 18 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம் செய்துள்ளது. உத்தேசத்திட்டத்தின் சுருக்கமான வடிவத்தை இரண்டு தமிழ் மற்றும் இரண்டு ஆங்கில நாளிதழ்களில் வெளியிடுமாறு வாரியம் பணிக்கப்பட்டது. அந்த விளம்பரத்தில் 2009 டிசம்பர் 24 வரை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதுகுறித்து மறுப்புரை மற்றும் குறிப்புரைகளைப் பெறுவதற்காகக் கூறப்பட்டிருந்தது. எனினும், ஆணையம் அந்த தேதிக்கு அப்பாலும் பெறப்பட்ட மறுப்புரைகளையும் பரிசீலித்தது.

2. இந்த உத்தேசத்திட்டம் 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 88ஆம் பிரிவிற்கு இணங்க 2009 டிசம்பர் 23 அன்று மாநில ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது. ஆலோசனைக்குழுவில் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்துவது என்றும் தன்விருப்பாக முன்வரும் தேர்ந்தெடுக்கப்படும் நுகர்வோருக்கு மட்டுமே இந்த மின் கட்டண உயர்வு பொருந்தும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 2003ஆம் ஆண்டுமின்சாரச் சட்டத்தின் பிரிவுகள் 88 மற்றும் 64-க்கு இணங்க பொதுமக்கள் கருத்துக்கேட்பிற்கு உட்பட்டு ஆலோசனைக்குழுவினால் பரிசீலிக்கப்படும்

மின்கட்டணம்தொடர்பான உத்தேசத்திட்டம் ஒத்துக் கொள்ளப்படமாட்டாது மற்றும் ஆலோசனைக்குழுவில் கூடுதல் மின்சாரம் பயன்படுத்த உயர் அழுத்த நுகர்வோர் அனைவருக்கம் விருப்பம் தெரிவிக்கலாம் என்றும், மற்றும் கூடுதல் மின்சாரம் விருப்பம் தெரிவிக்கும் நுகர்வோரிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

3. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உத்தேசத்திட்டம் 2009 டிசம்பர் 30 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக்கேட்பிற்கு உட்பட்டதாகும். கூட்டத்தில் மொத்தம் 41 நபர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் குறிப்பாக, விருப்பமுள்ள உயர் அழுத்த நுகர்வோர் அனைவருக்குமிடையே கூடுதல் மின்சாரம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் கூடுதல் மின்சாரம் நுகர்வோரின் வகையினர் அனைவரிடையேயும் நடைமுறையிலுள்ள மின்கட்டணவீதத்தில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது. இக்கூட்டத்தில் பேசியவர்கள் அனைவரும் இந்தக் கூடுதல் மின்சாரத்திற்கான பட்டியல் நடைமுறை தொடர்பான விளக்கம் அளிக்குமாறு கோரினர்.

4. மாநில ஆலோசனைக்குழுவிடமிருந்தும், பொதுமக்கள் கருத்துக கேட்புக் கூட்டத்திலிருந்தும் பெறப்பட்ட குறிப்புரைகள் மற்றம் மறுப்புரைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆணையம் 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 62 மற்றும் 64ஆம் பிரிவுகளின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி பின்வருமாறு உத்தரவிடுகிறது :–

(a) அதிகரிக்கப்பட்ட மின்கட்டணம் விருப்பம் தெரிவித்துள்ள உயர் அழுத்த நுகர்வோருக்கு மட்டுமே பொருந்தும் ; வேறுபட்ட மின்கட்டணங்களை வகுத்துரைப்பதற்கு, சட்டத்தடை எதுவும் இல்லை.

(b) தற்போது உயர் அழுத்த தொழில் நுகர்வோர் பிற்பகல் 6.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையேயான 95 விழுக்காடு மின்தடைக்கும் எஞ்சிய நேரங்களின்போது 20 விழுக்காடு மின்தடைக்கும் உட்பட்டுள்ளனர்.

(c) தமிழ்நாடு மின்சார வாரியம், யூனிட் ஒன்றுக்கு ரூ.7/–க்குமேற்படாமல் கூடுதல் மின்சாரம் வழங்குவதற்காக தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்து வரையறை மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு நுகர்வோர் பிற்பகல் 6.00 மணி மற்றும் 10.00 மணிக்கிடையேயுள்ள நேரத்திலும் அதோடு எஞ்சிய நேரங்களிலும், கூடுதல்

மின்சாரம் தேவைப்படும் நுகர்வோர் தங்களுடைய தேவையைக் குறிப்பிடலாம் என்று உயர் அழுத்த நுகர்வோர் அனைவருக்கும் தகவல் தெரிவித்துள்ளது.

(d) தமிழ்நாடு மின்சார வரியம் வாங்கிய மின்சாரம், உயர் அழுத்த தொழில் நுகர்வோருக்கு தேவையான அளவைவிட குறைவாக இருக்குமானால், கூடுதல் மின்சாரம், விருப்பம் தெரிவித்த நுகர்வோருக்கிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

(e) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் பிற்பகல் 6.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலான நேரத்தில் தற்போது வழங்கப்படும் 5 விழுக்காடு பங்கிற்கு மேல் வழங்கப்பட்ட கூடுதல் மின்சாரமானது கூடுதல் மின்சாரமாகக் கணக்கிடப்படும்.

(f) எஞ்சிய நேரங்களில் 20 விழுக்காடு மின்தடையிலிருந்து அளிக்கப்படும் நிவாரணம், கூடுதல் மின் வழங்கலாகக் கருதப்படும்.

(g) கூடுதல் மின் வழங்கலானது, அடிப்படைத் தேவை மற்றும் அடிப்படை மின் வழங்கலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(h) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வழங்கப்படும் கூடுதல் மின் தேவை மற்றும் கூடுதல் மின் வழங்கலானது, கூடுதல் மின்தேவை மற்றும் கூடுதல் ன்சாரத்திற்கான தண்டக் கட்டணமாகக் கருதப்படுதல் ஆகாது. இந்த ஏற்பாட்டினைத் தொடர்ந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வழங்கப்படும் மின்சாரத்தைவிட கூடுதல் மின்தேவை மற்றும் மின் நுகர்வானது, தண்டக் கட்டணமாகக் கணக்கிடப்படும்.

(i) இந்த நடைமுறையில் வழங்கப்பட்ட மின்தேவையின் கூடுதல் அளவுக்கு, 2003ஆம் ஆண்டு மின்கட்டண ஆணையில் ஆணையத்தினால் வகுத்துரைக்கப்பட்ட வீதத்தில் மின்தேவைக் கட்டணத்தை வசூலிக்க, தமிழ்நாடு மின்சார வாரியம் உரிமையுடையதாகும்.

(j) வாரியம் பிற்பகல் 6.00 மணியிலிருந்து 10.00 மணிக்கிடையிலான நேரத்திலும் எஞ்சிய நேரங்களிலும் உயர் அழுத்த நுகர்வோர் அனைவரிடத்தும், மாதாந்திர அட்டவணையை உறுதி செய்ய வேண்டும். மாதாந்திர அட்டவணையிலுள்ள மாறுபாடு எதுவும் பற்றி, குறைந்தது ஒரு வாரத்திற்குள் நுகர்வோருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(k) தமிழ்நாடு மின்சார வாரியம், ஒவ்வொரு நுகர்வோரிடமிருந்தும் ஒவ்வொரு மாத்திற்குமான தேவைப்படும் கூடுதல் மின்தேவை மற்றும் மின்சாத்தை அடிப்படை மின்தேவை மற்றும் அடிப்படை மின்சாரத்திற்கு உட்பட்டு உறுதி செய்தல் வேண்டும்..

தமிழ்நாடு மின்சார வாரியம், இந்தத் திட்டம் தொடங்கும் மாதத்தின் தொடக்கத்திற்கு ஒருவாரத்திற்கு முன்பு, கிடைக்கக்கூடிய கூடுதல் மின் தேவை மற்றும் மின்சரம் பற்றி நுகர்வோருக்கு உறுதி செய்தல் வேண்டும். பிற்பகல் 6.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையேயுள்ள நேரத்திலும், எஞ்சிய நேரங்களிலும், தமிழ்நாடு மின்சார வரியத்தினால் உறுதி கூறப்பட்ட கூடுதல் மின்தேவை மற்றும் மின்சாரமானது, மின் நுகர்வோர் கூடுதல் மின் தேவை மற்றும் மின்சாரத்தினை வழக்கமான மின்கட்டணவீதத்தில் நுகரலாம். இந்த நுகர்வுக்கு தண்டக் கட்டணம் விதிக்கப்படுதல் ஆகாது. இதுபோன்று, நுகர்வோர், தாங்கள்கோரிய மின்தேவை மற்றும் மின்சாரத்தை பயன்படுத்தவில்லை என்றால், நுகர்வோர் தாங்கள் கோரிய மின்சாரத்தின் அளவிற்கு கூடுதல் கட்டணம் செலுத்துவற்கு உட்பட்டவாராவர்.

(l) நுகர்வோருக்கு வழங்கப்பட்ட மின்சாரமானது, இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். முதல் பிரிவானது, நுகர்வோரால் கோரப்பட்ட கூடுதல் மின்சாரமாக இருக்கும். இரண்டாவது பிரிவானது எஞ்சிய பகுதி மின்சாரமாக இருக்கும் முதல் பகுதியானது, அதிக அளவிலான கட்டணவீதத்தில் பட்டியலிடப்படும் மற்றும் இரண்டாவது பகுதியானது வழக்கமான கட்டணவீதத்தில் பட்டியலிடப்படும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்